




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








புதன் ❖ பிப்ரவரி. 15, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 132 ❖ ரூ.10


### குஜராத் கலவரம் தொடர்பாக பிபிசி வெளியிட்ட ஆவணப்படங்கள்

# விளக்கம்

## பிபிசி நிறுவனத்தில் விதி மீறல்கள் நடந்துள்ளன: வருமானவரித் துறை

### வினாச காலே விபரீத புத்தி என்பதற்கு இணங்க மத்திய அரசின் செயல் உள்ளது;காங்கிரஸ்

புதுடெல்லி, பிப். 15-

பிபிசி செய்தி நிறுவனம் பரிமாற்ற விலை விதிகளை மீறியுள்ளதாக வருமானவரித் துறை விளக்கம் அளித்துள்ளது. டெல்லி மற்றும் மும்பையில் உள்ள பிபிசி செய்தி நிறுவன அலுவலகங்களில் வருமானவரித் துறை அதிகாரிகள் நேற்று அதிரடியாக கணக்குகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.



இது குறித்து வருமான வரித்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இது சோதனை அல்ல என்றும், கணக்கு ஆய்வு என்றும் தெரிவித்துள்ளனர். தாங்கள் மேற்கொண்ட இந்த ஆய்வில், பரிமாற்ற விலை விதிகளை பிபிசி மீறி இருப்பது தெரிய வந்துள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

பிபிசி தங்கள் வருமானத்தை மடைமாற்றுவது நீண்ட காலமாக இருந்து வருவதாகவும், இது குறித்து வருமானவரித் துறை பலமுறை அறிக்கை அனுப்பி உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும்,பிபிசிதொடர்ந்து இந்த விதிமீறலில் ஈடுபட்டு வந்ததால், இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, இந்தச் சோதனை குறித்து கருத்து தெரிவித்த பிபிசி, டெல்லி மற்றும் மும்பையில் உள்ள தங்கள் அலுவலகங்களில் வருமானவரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருவதாகவும், தாங்கள் முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும், சோதனை விரைவில் முடிவடையும் என நம்புவதாகவும் தெரிவித்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த இங்கிலாந்து அரசு, இந்தியாவில் உள்ள பிபிசி அலுவலகங்களில் வருமானவரித் துறை அதிகாரிகள் நடத்தும் சோதனை குறித்து உன்னிப்பாக கண்காணித்து வருவதாகத் தெரிவித்தனர்.

இந்த சோதனை குறித்து கருத்து தெரிவித்துள்ள மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர், முறைகேடுகள் நடப்பதாகத் தெரிய வந்தால், அதன் அடிப்படையில் வருமானவரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்துவது வழக்கமானதுதான் என்று கூறியுள்ளார்.

பிபிசி அலுவலகங்களிடம் நடத்தப்பட்ட இந்த சோதனைக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. குஜராத் கலவரம் தொடர்பாக பிபிசி வெளியிட்ட ஆவணப்படங்களை அடுத்தே இந்த சோதனை நடத்தப்பட்டு வருவதாகக் குற்றம்சாட்டிய அக்கட்சியின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ், வினாச காலே விபரீத புத்தி என்பதற்கு இணங்க மத்திய அரசின் செயல் உள்ளதாக விமர்சித்தார்.

, பிப்.15-

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு**

## ரூ.95 லட்சத்தில் நிறுவப்பட்டுள்ள சுதந்திர போராட்ட வீரர்களின் உருவச் சிலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்




சென்னை பிப்.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 18 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச்சிலை, 34 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மருதுபாண்டியர்களின் திருவுருவச்சிலை மற்றும் 43 லட்சம் ரூபாய் செலவில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் கோவை சிறையில் இழுத்த பொலிவூட்டப்பட்ட செக்கு மற்றும் வ.உ.சி. அவர்களின் மார்பளவுச் சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

2021-22ம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டுத் தூக்குக் கயிற்றினை ஏற்றுக் கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் பாஞ்சாலங்குறிச்சி குறுநில மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கும், தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கும், சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மேலும், வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய 150-வது பிறந்த நாள் விழாவினையொட்டி 3.9.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சர் வெளியிட்ட 14 அறிவிப்புகளில், சென்னை, காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ.சிதம்பரனார் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்க கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்படும் என்றும் அறிவித்தார். அதன்படி, சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில், 18 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச்சிலை, 34 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மருதுபாண்டியர்களின் திருவுருவச்சிலை மற்றும் 43 லட்சம் ரூபாய் செலவில் வ.உ.சிதம்பரனார் கோவை சிறையில் இழுத்த பொலிவூட்டப்பட்ட செக்கு மற்றும் வ.உ.சி. அவர்களின் மார்பளவுச் சிலை ஆகியவற்றை முதலமைச்சர் நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஹசன் மௌலானா, துணை மேயர் மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மோகன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டையில் கேஎம்எஸ் ஹக்கிம் கல்யாண பிரியாணி ஹோட்டலை விக்கிரமராஜா திறந்து வைத்தார்






புதுக்கோட்டை , பிப்.15-

புதுக்கோட்டையில் தனது இரண்டாவது கிளையினை பேருந்து நிலையத்திற்கு எதிரே திறந்து இருக்கும் பிரியாணிஉலகின்அரசன் என்று அனைவராலும் போற்றப்படும்கேஎம்எஸ் ஹக்கீம் கல்யாண பிரியாணி திறப்பு விழாவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தேசிய முதன்மை துணைத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

விழாவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு திருச்சி மண்டல தலைவர் தமிழ்ச்செல்வம் தலைமை வகித்தார். புதுக்கோட்டை டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் கே.எச்.சலீம் முன்னிலை வகித்தார். முதல் விற்பனையினை புதுக்கோட்டை மாவட்ட வர்த்தக கழகத்தின் தலைவர் பெற்றுக்கொண்டார். விழாவில் புதுக்கோட்டை மாவட்ட ஹோட்டல் அசோசியேசன் தலைவர் சண்முக பழனியப்பன், வர்த்தக கழகத்தின் நிர்வாகிகள் செயலாளர் சவரிமுத்து, பொருளாளர் கதிரேசன், திருச்சி மாவட்ட தலைவர் ஸ்ரீதர் உள்ளிட்ட ரோட்டரி சங்க நிர்வாகிகள் கேஎம்எஸ் வாடிக்கையாளர்கள் ஏராளமான கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திறப்பு விழாவில் புதுகை வரலாறு நாளிதழ் வெளியிட்டிருந்த சிறப்பு மலரை கேஎம்எஸ் நிர்வாகிகள் ஹக்கீம், சைய்யது இப்ராஹிம் ஆகியோர் வெளியிட விக்கிரமராஜா மற்றும் வர்த்தக கழக நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர்.

## துருக்கி நிலநடுக்கம் ஐரோப்பாவில் கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத மோசமான இயற்கை பேரழிவு – உலக சுகாதார அமைப்பு

துருக்கி பிப்.15-

துருக்கி நிலநடுக்கம், ஐரோப்பா பகுதியில் 100 ஆண்டுகளில் இல்லாத "மோசமான இயற்கை பேரழிவாக" அமைந்தது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.




கடந்த வாரம் துருக்கியில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கம், ஐரோப்பா பகுதியில் 100 ஆண்டுகளில் இல்லாத "மோசமான இயற்கை பேரழிவாக" அமைந்தது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. பிப்ரவரி 6 அன்று ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தால், துருக்கியிலும் அண்டை நாடான சிரியாவிலும் தற்போது வரை 35,000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

உலகை உலுக்கிய இந்த நிலநடுக்கம் குறித்து ஐரோப்பியாவிற்கான உலக சுகாதார அமைப்பின் பிராந்திய இயக்குநர் ஹான்ஸ் க்ளூஜ் ஒரு செய்தியாளர்கள் கூட்டத்தில் கூறும்போது, "ஒரு நூற்றாண்டு காலமாக ஐரோப்பிய பிராந்தியத்தில் மிக மோசமான இயற்கைபேரழிவை நாங்கள் சந்தித்துள்ளோம். நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அவசர மருத்துவ குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதுவரை 22 அவசர மருத்துவ குழுக்கள் துருக்கிக்கு வந்துள்ளன. நிலநடுக்கத்தின் அளவை நாங்கள் இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## எச்சரிக்கை விடுக்கும் உலக சுகாதார அமைப்பு கினியாவில் மார்பர்க் வைரஸ் பரவலுக்கு 9 பேர் பலி

கினியா பிப்.15-

ஈகுவடோரியல் கினியா நாட்டில் மார்பர்க் வைரசின் பரவல் ஏற்பட்டு 9 பேர் பலியாகி உள்ளனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்து உள்ளது.

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான ஈகுவடோரியல் கினியா நாட்டில் மார்பர்க் வைரசின் பரவல் பற்றி தெரிந்ததும் அதுபற்றி அந்நாடு உலக சுகாதார அமைப்பிடம் தெரிவித்து உள்ளது. இதனை தொடர்ந்து தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வைரஸானது, எபோலா வைரஸால் ஏற்படும் பாதிப்புகளை ஏற்படுத்த கூடிய அதே குடும்ப வகையை சேர்ந்தது. அதிக பரவும் தன்மை கொண்ட, 88 சதவீதம் உயிரிழப்பு ஏற்படுத்த கூடியது.

இதனால், தீவிர காய்ச்சல், கடுமையான தலைவலி மற்றும் உடல்நிலை மோசமடைவது உள்ளிட்ட பாதிப்புகள் காணப்படும். நோயாளிகள் பலருக்கு 7 நாட்களில்



கடுமையான இரத்த கசிவு அறிகுறிகளும் ஏற்படும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நிலையில், தொற்று ஏற்பட்டு உயிரிழந்த 9 பேரின் மாதிரிகளை பரிசோதனை செய்ததில், அவர்களுக்கு மார்பர்க் வைரசின் பாதிப்பு ஏற்பட்டு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால், ஈகுவடோரியல் கினியா நாட்டில் மார்பர்க் வைரசின் பரவல் அறிவிக்கப்பட்டு உள்ளது. நோய்பாதித்த மாவட்டங்களில் தொடர்புடைய நபர்கள் மற்றும் அறிகுறிகளுடன் கூடியவர்களை கண்டறிந்து, அவர்களை தனிமைப்படுத்தி, மருத்துவ சிகிச்சை அளிக்க குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன. 500 சுகாதார பணியாளர்கள் பயன்படுத்த கூடிய பாதுகாப்பு உபகரணங்களை உலக சுகாதார அமைப்பு வழங்கியுள்ளது.

## புல்வாமா தாக்குதலில் வீரர்களின் தியாகத்தை என்றும் மறக்க மாட்டோம் – பிரதமர் மோடி டுவிட்

டெல்லி, பிப்.15-

2019 பிப்ரவரி 14-ம் தேதி காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையினரை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் சென்றுகொண்டிருந்தன. அப்போது, பாதுகாப்பு படையினரின் வாகனங்கள் மீது வெடிகுண்டு நிரப்பப்பட்ட காரை மோதச் செய்து பயங்கரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பாதுகாப்பு படையினர் 40 பேர் வீரமரணமடைந்தனர். இந்த தற்கொலை தாக்குதலை பாகிஸ்தானில் இருந்து செயல்பட்டு வரும் ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்பு நடத்தியது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பிப்ரவரி 26-ம் தேதி பாகிஸ்தானின் பாலக்கோட்டில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய விமானப்படை அதிரடி தாக்குதல் நடத்தியது.

மேலும், 2019 ஆகஸ்ட் 5-ம் தேதி ஜம்மு-காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்த்தை ரத்து செய்து அந்த மாநிலத்தை 2



யூனியன் பிரதேசங்களாக பிரித்து அப்பகுதியை மத்திய அரசு தனது நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. இந்நிலையில், புல்வாமா தாக்குதலின் 4-ம் ஆண்டு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து புல்வாமா தாக்குதலில் வீரமரணமடைந்த 40 வீரர்களுக்கு அரசியல் தலைவர்கள் உள்பட பலர் அஞ்சலி செலுத்தினர். அந்த வகையில், வீரமரணமடைந்த வீரர்களுக்கு பிரதமர் மோடி அஞ்சலி செலுத்தியுள்ளார். இது தொடர்பாக பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், இந்த நாளில் புல்வாமாவில் நாம் இழந்த நமது வீரம் மிக்க வீரர்களை நினைவு கூர்வோம். வீரர்களின் உயிர் தியாகத்தை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம். வீரர்களின் தைரியம் வலுவான மற்றும் வளர்ந்த இந்தியாவை உருவாக்க நம்மை ஊக்குவிக்கிறது' என தெரிவித்துள்ளார்.

## தென்காசி பள்ளிக்கு கணினி வழங்கிய முன்னாள் மாணவர்கள்

தென்காசி, பிப்.15

தென்காசியில் உள்ள வீரமாமுனிவர் ஆர்.சி. மேல்நிலைப் பள்ளி முன்னாள் மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிக்கு ரூபாய் 1.30 லட்சம் மதிப்பில் 7 கணினிகள் பரிசளித்தனர். தென்காசி மேலப்புலியூரில் உள்ள வீரமாமுனிவர் ஆர்.சி. மேல்நிலைப் பள்ளி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு ஜன.17ல் நடைபெற்றது. அப்போது பள்ளி நிர்வாகம் சார்பில் கணினி ஆய்வகத்திற்கு ஓர் கணினி வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்து முன்னாள்



மாணவரும் தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு சங்க துணைப் பதிவாளருமான சுப்புராஜ் ஒருங்கிணைப்பில் ரூ.1.30 லட்சம் மதிப்பில் 7 கணினிகள் வாங்கப்பட்டு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர் அகமது மீரான் தலைமை வகித்தார் சுப்புராஜ் சிறப்புரையாற்றினார். முன்னாள் ஆசிரியை குழந்தை திரேஸ் மற்றும் முன்னாள் மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினர். மேலும் நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர்கள் பள்ளியில் பயின்ற காலத்தின் சுவையான நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர். முன்னாள் மாணவர்கள் சார்பில் வீரமாமுனிவர் ஆர்.சி. தொடக்கப் பள்ளிக்கு புதிதாக ஓர் கணினி வழங்குவதாக உறுதியளித்தனர். பள்ளித் தாளாளர் அருட்தந்தை போஸ்கோ குணசீலன் வரவேற்றார். அருட்சகோதரி ஷீலா நன்றி கூறினார். நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அமெரிக்காவில் பல்கலைக்கழகத்தில் நடத்த துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் பலி

*அமெரிக்கா பிப்.15-*

*அமெரிக்காவில் பல்கலைக்கழகத்தில்நடத்த துப்பாக்கிச்சூட்டில்5பேர் உயிரிழந்தனர்.*

*அமெரிக்காவின் மிச்சிகன் மாகாண பல்கலைக்கழகத்தில்நேற்று (அந்நாட்டுநேரப்படி இரவு 10 மணி) துப்பாக்கிச்சூடு நடைபெற்றது.*



*பல்கலைக்கழகவளாகத்தில் உள்ள 2 கட்டிடங்களில் அடுத்தடுத்து துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. இந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.*

*தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காவல்துறையினர் பல்கலைக்கழகத்தில் இருந்த மாணவர்கள், ஆசிரியர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து சென்றனர். மேலும், துப்பாக்கிச்சூடு நடத்தியது யார் என்று காவலர்கள் தீவிரமாக தேடி வருகின்றனர். பல்கலைக்கழகம்முழுவதும் காவல்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது.*

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## ஜெயங்கொண்டம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு கட்டுரை போட்டி



அரியலூர் பிப்.15–

ஜெயங்கொண்டத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கட்டுரை போட்டி நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில், தமிழகமுதல்வர்ஸ்டாலின் ஆணைப்படி, 6 முதல் 9 -ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவிகளுக்கு, வட்டார அளவிலான இலக்கிய மன்றம் சார்ந்த கட்டுரைப் போட்டி நடைபெற்றது. இதனை ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் த.விஜயலெட்சுமி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம், மாவட்ட கல்விஅலுவலர்(இடைநிலை) ஜெயா, பள்ளிக் கல்வி உதவி ஆய்வாளர் செல்வகுமார், வட்டார கல்வி அலுவலர்கள் மதலைராஜ், ராஜாத்தி, அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராஜ்குமார் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## உளுந்தூர்பேட்டையில் காவல்துறை சார்பில் தலைக்கவசம் அணிவது குறித்து விழிப்புணர்வு பேரணி



கள்ளக்குறிச்சி, பிப்.15–

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில், உளுந்தூர்பேட்டை உட்கோட்ட காவல்துறை சார்பில் விபத்திலா சாலை போக்குவரத்தை கடைபிடிக்கவேண்டியும் தலைக்கவசம் அணிய வலியுறுத்தியும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக காவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டு, தலைக்கவசம் அணிந்து இரண்டு சக்கர வாகனத்தில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இப்பேரணி, உளுந்தூர்பேட்டை உட்கோட்ட காவல்துறை துணைகண்காணிப்பாளர் மகேஷ் தலைமையில் நடைபெற்றது. இப்பேரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு பேருந்து நிலையம், திருவெண்ணைநல்லூர் செல்லும் சாலை வழியாக சென்று பொதுமக்களிடையே சாலைவிபத்தைதவிர்க்கும் விதமாக விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இப்பேரணியில் உளுந்தூர்பேட்டை காவல்நிலைய ஆய்வாளர் தமிழ்வாணன், அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் விஜி, போக்குவரத்து காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி, உதவி ஆய்வாளர் அலெக்ஸ் மற்றும்இருபால்காவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஆவுடையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் தொழுநோய் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



ஆவுடையார்கோவில் பிப்.15–

ஆவுடையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் தொழுநோய் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் குடற்புழு நீக்க நாள் கொண்டாட்டம் நடைபெற்றது.

ஆவுடையார் கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று தொழுநோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பற்றி பொன்பேத்திவட்டார மருத்துவ அலுவலர் பிரியதர்ஷினி மாணவர்களிடையே கலந்துரையாடி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மாணவர்களிடையே தொழுநோய் சார்ந்த வினாக்கள் கேட்டு சிறப்பாக பதிலளித்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

மேலும் குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு குடற்புழு நீக்கம் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி அனைத்து மாணவர்களுக்கும் மாத்திரை வழங்கினார்கள். இந்நிகழ்விற்கு பள்ளி தலைமையாசிரியர் தாமரைச்செல்வன் தலைமை வகித்தார். உதவி தலைமை ஆசிரியர் ஸ்டாலின், விலங்கியல் ஆசிரியை புவனேஸ்வரி, உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்களும் மருத்துவ ஆய்வாளரின் மேற்பார்வையாளர் பன்னீர்செல்வம், கிராம நல செவிலியர் ராஜேஸ்வரி ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







▶ தென்காசி மாவட்டம், புளியங்குடி நகர் மன்ற துணைத் தலைவரும், திமுக நகர செயலாளருமான, அந்தோணி சாமி, தென்காசி மாவட்டத்திற்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரனை சந்தித்து சால்வை அணிவித்து மக்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள் தெரிவித்தார். மேலும் புளியங்குடி நகர மக்களின் அன்றாட தேவையான தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம், சுகாதாரம், மருத்துவம், மழைக்காலங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரை வெளியேற்றி கொசு ஒழிப்பு செய்திடவும், தொற்று நோய்களிலிருந்து முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை மேற்கொள்ளவும், புளியங்குடி மருத்துவமனையை தரம் உயர்த்தி தரவும் நோயாளிகளுக்கு கூடுதல் மருத்துவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முன் வைத்தார்.

## சண்முகநாதன் பொறியியல் கல்லூரியில் தொழில் முனைவோருக்கான வழிகாட்டி பயிற்சிப்பட்டறை



திருமயம் பிப்.15–

இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் சார்பில், அரசம்பட்டி சண்முகநாதன் பொறியியல் கல்லூரி மற்றும் திருமயம், பாரத்மாதா இளையோர் மன்றம் இணைந்து நடத்திய தொழில் முனைவோருக்கான வழிகாட்டும் பயிற்சிப் பட்டறை நேற்று முந்தினம் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

புதுக்கோட்டை நேரு யுவகேந்திரா தேர்வுக்குழு உறுப்பினர் சரவணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சண்முகநாதன் பொறியியல் கல்லூரி முதல்வர் முத்துராமு முன்னிலை வகித்தார். புதுக்கோட்டை நேரு யுவகேந்திரா மாவட்ட இளையோர் அலுவலர் ஜோயல் பிரபாகரன் தலைமை உரை நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினர்களாக சென்னை பத்திரிகையாளர் நம்பிநாராயணன் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கம்பன் கழக கூடுதல் செயலாளர் பாரதி, கற்பக விநாயகா மேலாண்மைக் கல்லூரி இயக்குநர் அனிதாராணி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மேலும் இவ்விழாவில் ஜெ.ஜெ.கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் தயாநிதி, புதுக்கோட்டை நேரு மாவட்ட குழந்தைகள் நலக்குழு தலைவர் சதாசிவம் நேரு யுவகேந்திரா திட்ட உதவியாளர் நமசிவாயம் மற்றும் அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவியர், புதுக்கோட்டை நேரு யுவகேந்திரா பொறுப்பாளர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிறைவாக புதுக்கோட்டை நேரு யுவகேந்திரா தன்னார்வலர் கருப்பையா நன்றி கூறினார்.



▶ புதுவை மாநிலம் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் நேற்று மாலை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் மேலும் துணை மாவட்ட ஆட்சியர் இவர்களுடன் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார்கள். இந்நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் குறைகளை அமைச்சர் நமச்சிவாயம் தெரிவித்தார்.

## கீரமங்கலத்தில் தோட்டத்தில் இருந்த பூஞ்செடிகளை அகற்றியவர்களை கைது செய்ய கோரி சாலை மறியல்



ஆலங்குடி பிப்.15–

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் தோட்டத்தில் இருந்த பூஞ்செடிகளை வெட்டி அகற்றியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

கீரமங்கலம் அரண்மனைக் கொல்லையைச்சேர்ந்தவர் சண்முகவடிவேல்(45). இவர், ஒன்றரை ஏக்கரில் மல்லி, முல்லை ஆகிய பூஞ்செடிகளை நட்டு பராமரித்து வந்துள்ளார். இந்த இடம் தொடர்பாக இவருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த மற்றொருவருக்கும் இடையே பிரச்சினை இருந்ததாகத் தெரிகிறது.

இந்நிலையில், அதே பகுதியைச் சேர்ந்த சிலர் சண்முகவடிவேலின் தோட்டத்தில் இருந்த பூஞ்செடிகளை வெட்டி அகற்றியுள்ளனர். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கீரமங்கலம் காவல்நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது. இதைக் கண்டித்தும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் கீரமங்கலம் பேருந்து நிலையம் அருகே சண்முகவடிவேல் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

மறியலில் ஈடுபட்டோரிடம் கீரமங்கலம் காவல்துறையினர் மற்றும் வருவாய்த் துறையினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் உரிய நடவடிக்கைஎடுக்கப்படும் என கூறியதையடுத்து சாலைமறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த சாலை மறியல்போராட்டத்தால் பட்டுக்கோட்டை அறந்தாங்கி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## செந்துறை அருகே நிருபர் என்கிற போர்வையில் வழக்கறிஞர் வீட்டிற்குள் நுழைந்து பள்ளி மாணவியை வீடியோ எடுத்த வாலிபர் போக்சோ சட்டத்தில் கைது

அரியலூர் பிப்.15–

செந்துறை அருகே, நிருபர் என்கிற போர்வையில், வழக்கறிஞர் வீட்டுக்குள் நுழைந்து, பள்ளி மாணவியை வீடியோ எடுத்த வாலிபர் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை அருகே, பொன்பரப்பி கிராமத்தைச் சேர்ந்தவர் தனசுந்தரி(43 ). இவர் செந்துறை நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறார். தற்போது இவர் சிறுகளத்தூர்-பெரியாக்குறிச்சி கிராமங்களுக்கு இடையே, அவரது உறவினர் தனலெட்சுமி( 47) மற்றும், பத்தாம் வகுப்பு படிக்கும் தனது மகளுடன் தனியாக வசித்து வருகிறார்.

செந்துறை, குறவர் காலனியில் வசித்து வரும், கொளஞ்சிநாதன் மகன் சிவா (30) என்பவர், செந்துறை காவல் நிலையம் அருகே, போட்டோஸ் ஸ்டுடியோ நடத்தி வருகிறார். ஒரு சில தனியார் தொலைக்காட்சிகள் மற்றும் ஒரு மாலை நாளிதழ் உள்ளிட்டவற்றில் செந்துறை பகுதி நிருபராக பணியாற்றி வருவதாக கூறப்படும் இவர், கடந்த 11.-ம் தேதி காலையில், செந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், சத்துணவு அமைப்பாளராக வேலை பார்க்கும், குறிச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த வெண்ணிலா (27), மற்றும் தனது தந்தை கொளஞ்சிநாதன் ஆகியோருடன், வழக்கறிஞர் தன சுந்தரி வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாக கூறப்படுகிறது.

அப்போது சிவா தனது செல்போனை வீடியோ ரெக்கார்டிங் செய்யும் வகையில் செயல்படுத்தி, தனது பையில் வைத்துக் கொண்டு உள்ளே சென்றுள்ளார். அந்த நேரத்தில் வழக்கறிஞர் தனசுந்தரி படுக்கையில் படுத்து இருந்தார். பத்தாம் வகுப்பு படிக்கும் அவரது மகள் குளித்துவிட்டு வந்து உடைகளை மாற்றிக் கொண்டிருந்தார். அவரையும் சிவா வீடியோ எடுத்துள்ளார்.

இதனைக் கண்ட வழக்கறிஞர் தனசுந்தரி, ஏன் வீடியோ எடுக்குறீர்கள்.



யார் நீங்கள் என்று விசாரித்தார். வீடியோ எடுப்பதை நிறுத்துங்கள் என கூறினார். வீடியோ எடுப்பதை நிறுத்த முடியாது, நான் பத்திரிக்கையாளர் என கூறிய சிவா, தொடர்ந்து வீடியோ எடுத்து உள்ளார்.

இந்த நிலையில் வழக்கறிஞர் தனசுந்தரி- சிவா உள்ளிட்ட இருவருக்கும் இடையே, தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது தனசுந்தரி அணிந்து இருந்த 2 பவுன் தங்கச் சங்கிலியை பறித்து கொண்டு, சிவா தப்பி ஓடியதால், அங்கிருந்த வழக்கறிஞர் உறவினர் தனலெட்சுமி, சிவாவை பிடிக்க முயன்றார். அப்போது சிவா தனலெட்சுமியை தாக்கி கீழே தள்ளி விட்டு, தனது தந்தை கொளஞ்சிநாதனுடன் அங்கிருந்து தப்பி ஓடி விட்டதாக கூறப்படுகிறது.

இந்த தாக்குதலில் காயமடைந்த தனலெட்சுமியை 108 ஆம்புலன்ஸ் மூலம் செந்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்து, மேல் சிகிச்சைக்காக அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். சிவாவுடன் வந்த சத்துணவு ஊழியர் வெண்ணிலா ஓட்டி வந்த ஸ்கூட்டரை, செந்துறை காவல்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

சம்பவம் குறித்து வழக்கறிஞர் தனசுந்தரி செந்துறை காவல்துறையில் கொடுத்த புகார் மீது, வழக்கு பதிவு செய்த காவலர்கள், சிவாவை தேடி வந்தனர். இந்நிலையில் காவலர்கள் உடனடியாக சிவாவை கைது செய்யவேண்டும் என்று, செந்துறை வழக்கறிஞர்கள் சங்க தலைவர் சின்னதுரை தலைமையில், நீதிமன்றத்தை புறக்கணித்த வழக்கறிஞர்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். அதனைத் தொடர்ந்து காவலர்கள் சிவாவை கைது செய்தனர்.

நிருபர் என்கிற போர்வையில் அடாவடியில் ஈடுபட்ட சிவா மீது, போக்சோ, செயின் திருட்டு, பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்பட 5 குற்ற பிரிவுகள் மீது வழக்கு பதிவு செய்த செந்துறை காவலர்கள், அவரை அரியலூர் மகிளா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, சிறையில் அடைத்துள்ளனர்.

முந்திரி காட்டு பகுதியில், பெண்கள் மட்டுமே வசிக்கும் வீட்டிற்குள், நிருபர் என்று கூறி வீடு புகுந்து, பள்ளி மாணவி மற்றும் வழக்கறிஞரை, வீடியோ எடுத்த சம்பவம், செந்துறை பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மேலும் வழக்கறிஞர் தனசுந்தரியுடன் ஏற்பட்ட, பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பான முன் விரோதம் பற்றி, குறிச்சிகுளம் கிராமத்தை சேர்ந்த சத்துணவு அமைப்பாளர் வெண்ணிலா கொடுத்த புகார் தொடர்பாக, வழக்கறிஞர் தனசுந்தரி மீதும் செந்துறை காவலர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கட்டுமாவடி யேகோவா நிசி நர்சரி பிரைமரி பள்ளியில் சுற்றுப்புற சூழல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



கட்டுமாவடி பிப்.15–

கட்டுமாவடி யேகோவா நிசி நர்சரி பிரைமரி பள்ளியில் சுற்றுப்புற சூழல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி கல்வி மாவட்டம், கட்டுமாவடி யேகோவா நிசி நர்சரி பிரைமரி பள்ளியில் சுற்றுப்புற சூழல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி தாளாளர் மேசியா சந்தோஷம் தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர் பானுமதி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகி காந்தி சுற்றுப்புற சூழல் குறித்து. பேசினார்.

அவர் பேசுகையில், சுற்றுச்சூழல் சீர்கேடு உலகஉயிர்களுக்குபெரும் அச்சுறுத்தலாக உள்ளது. நம்மைச் சுற்றியுள்ள சுற்றுப்புறம் நாள்தோறும் மாசடைந்து வருகின்றது. இம்மாசுபாடுகளால் உலக உயிர்களின் வாழ்நாள் சுருங்கிக் கொண்டேயிருக்கிறது. நல்ல ஆரோக்கியமான வாழ்க்கையை இது தடுக்கிறது. சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதில் மனித நடவடிக்கைகளே பெரும் பங்கு வகிக்கின்றன. மாசுபாட்டை நீக்கி நல்ல ஒரு ஆரோக்கியமான வாழ்வைப் பெறுவதற்கு சுற்றுச்சூழலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல் அவசியம் என்பது உணரப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

நிகழ்ச்சியில் பி.எம். எஸ் அப்துல் கலீல் 200-க்கும் மேற்பட்ட பெற்றோர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி மரம் வளர்ப்பின் அவசியம் பற்றி பேசினார். மாணவர்கள் சுற்றுப்புற சூழல் குறித்து விழிப்புணர்வு நாடகத்தின் மூலம் எடுத்து உரைத்தார்கள். பெற்றோர்-ஆசிரியர் கழகம் சார்பில் காந்தி, நேரு, காமராஜர், அப்துல்கலாம், அன்னை தெரசா உள்ளிட்ட தலைவர்களின் உருவ படங்களை பள்ளிக்கு வழங்கினார்கள். ஆசிரியை சூர்யா நன்றி கூறினார். பள்ளி தலைமை ஆசிரியர் பானுமதி மற்றும் ஆசிரியர்கள் சிறப்பாக கூட்டத்தை நடத்தினார்கள்.

### எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரியில்

# இளங்கலை பட்டம் இறுதியாண்டு படிக்கும் மாணவர்கள் பல்வேறு செயல் விளக்கங்களை நடத்தினர்



செங்கல்பட்டு , பிப். 15 -

செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன்பேட்டை வேந்தர் நகரில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரியில் இளங்கலை பட்டம் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களாகிய குணசீலன், தருண் அரவிந்தன், நித்தீஸ்வரன், ஜெய்வெங்கட், லிட்வின் ரினால்ட், காலேப், மனோஜ், ஹரிஹரன், சுபாஷ், விபின், விஷ்வா ஆகியோர் செய்யூர் தாலுகா இலத்தூர் தொகுதியில் 3 மாதங்கள் தங்கி கிராமப்புற விவசாய பணி அனுபவம் செய்து வருகின்றனர். வயலில் எலி மேலாண்மை, 5 இலைச்சாறு மற்றும் 3 ஜி சாறு தயாரித்தல், மண் மாதிரி சேகரிப்பு, நைட்ரஜன் மேலாண்மையில் இலை வண்ண அட்டவணை பயன்பாடு, அசோலா உற்பத்தி போன்ற பல்வேறு செயல் விளக்கங்களை அவர்கள் நடத்தினர்.

மேலும் விவசாயம் தொடர்பாக பல்வேறு பயிலரங்குகள் நடத்தினர். காளான் வளர்ப்பு மற்றும் திருந்திய நெல் சாகுபடி பற்றிய பயிற்சியை மாணவர்கள் நடத்தினர். இந்த நிகழ்ச்சி கீழச்சேரி கிராமத்தில் நடைபெற்றது. நோயியல் துறையின் உதவிப் பேராசிரியர் டாக்டர் ரெக்ஸ், நோய் மேலாண்மை நிபுணர் மற்றும் டாக்டர் சரவணகுமார், வேளாண்மை துறை சிறப்பு நிபுணர் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, காளான் வளர்ப்பு மற்றும் திருந்திய நெல் சாகுபடி பற்றிய செயல் விளக்கத்தை விவசாயிகளுக்குக் விளக்கினார். இதில் குழ ஒருங்கினைப்பாளர் மரபியல் மற்றும் பயிர் பெருக்கம் சிறப்பு நிபுணர் R.மகேந்திரன் மற்றும் செய்யூர் உதவி விவசாய அதிகாரி முஸ்தபா நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இதில், 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பணப்பட்டுவாடாவை தடுக்க தீவிர கண்காணிப்பு



ஈரோடு, பிப். 15 -

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி பொதுமக்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில்4நிலைகண்காணிப்பு குழுக்கள், 3 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தலுக்கு இன்னும் 12 நாட்களே உள்ள நிலையில் ஈரோடுக்கு அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள், முகாமிட்டு தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் பணம் பட்டுவாடா தொடர்பாகவும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இதனைத்தொடர்ந்து தேர்தலில் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி 5 கம்பெனி துணை ராணுவ படை வீரர்கள் ஈரோடுக்கு வருகை தந்துள்ளனர். ஒவ்வொரு குழுவிலும் 80 பேர் வீதம் 400-க்கும் மேற்பட்டவர்கள் வந்துள்ளனர்.

இதுதவிர தமிழ்நாடு சிறப்பு காவல் படை வீரர்கள் 160 பேரும் வந்துள்ளனர். இதில் துணை ராணுவத்தினர் போலீசாருடன் இணைந்து வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து டவுன் டி.எஸ்.பி. ஆனந்தகுமார் கூறியதாவது, தேர்தல் நெருங்கி வருவதால் ஈரோடு கிழக்கு பகுதியில் மொத்தம் 27 இடங்களில் தற்காலிக சோதனை சாவடிகள் அமைத்து வாகன சோதனை தீவிரபடுத்தியுள்ளோம். இது தவிர 7 கார் குழுக்கள், 15 மோட்டார் சைக்கிள் குழுக்கள் தனித்தனியாக பிரிந்து சென்று தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகிறோம். இனிவரும் நாட்களில் சோதனை மேலும் தீவிரப்படுத்தப்படும் என்றார்.

# ஈரோடு கிழக்கு தொகுதி தேமுதிக வேட்பாளரை ஆதரித்து சுதீஷ் பிரச்சாரம்



ஈரோடு, பிப். 15 -

ஈரோட்டில் தே.மு.தி.க. வேட்பாளரை ஆதரித்து மாநில துணை செயலாளர் சுதீஷ் பிரசாரம் செய்தார். பிரசாரத்தின் போது தனக்கோடி லே-அவுட் பகுதியில் உள்ள ஒரு டீக்கடையில் டீ போட்டு குடித்தார். மேலும் பொதுமக்களுக்கும் டீ போட்டு கொடுத்தார்.

அவர் பிரசாரத்தின் போது, ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர் இளைஞர், நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவர். எனவே அவருக்கு இந்த முறை வாக்களித்து வெற்றி பெற செய்தால் உங்களின் கோரிக்கைகளை நிறைவேற சட்டசபையில் குரல் கொடுப்பார்.

இந்த இடைத்தேர்தலில் ஜனநாயகம் தோற்கடிக்கப்பட்டு பணநாயகம் அதிகமாக விளையாடுகிறது. தி.மு.க., அ.தி.மு.க. இரு கட்சிகளும் தினமும் பிரியாணியும் மதுவும் கொடுத்து ஓட்டு கேட்க அழைத்து செல்கிறார்கள். இதை பார்த்த பொதுமக்களிடையே அந்த கட்சிகள் மீது அதிருப்தி ஏற்பட்டு உள்ளது. நாங்கள் ஓட்டு கேட்க செல்லும் போது எங்கள் கட்சி தொண்டர்களுடன் கட்சி தலைவர் விஜயகாந்தின் விசுவாசிகளான பொதுமக்களும் வருகிறார்கள்.

ஓட்டு பதிவின் கடைசி நேரத்தில் வேட்பாளர்களுக்கு தங்கக்காசு மற்றும் பணம் கொடுக்கப்போவதாகவும் கூறப்படுகிறது. இதையெல்லாம் மீறி எங்களது கட்சி வேட்பாளர் அமோக வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. நீங்களும் உங்களது ஆதரவினைத்து முரசு சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# தமிழக அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பில் நாகர்கோவிலில் மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள்



நாகர்கோவில் ,பிப்.15-

தமிழக அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் மாநில அளவிலான விளையாட்டுபோட்டிகள் நடைபெற்றது.

கடற்கரை கைப்பந்து போட்டியில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த அணிகள் பங்கு பெற்ற நிலையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் உள்ள விவேகானந்த மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த மாணவ, மாணவிகள் மயிலாடுதுறைமாவட்டம் சார்பில் கலந்து கொண்டனர்.

19 வயது பிரிவில் ஆண்களுக்கான கடற்கரை கைப்பந்து போட்டியில் மாநில அளவில் முதலிடம் பிடித்தனர். இதேபோல் 17 வயது பெண்களுக்கான கடற்கரை கைப்பந்து போட்டியில் கலந்து கொண்டு மாநில அளவில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றனர்.

பதக்கம் வென்று சொந்த ஊர் திரும்பிய மாணவ, மாணவிகளுக்கு பள்ளி நிர்வாகம் மற்றும் பெற்றோர்கள் இரயில் நிலையத்தில் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி மேள தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும் திறந்த வாகனத்தில் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக சென்றனர்.



இராணிப்பேட்டை இரத்தனகிரி சண்முக புஷ்பகரனுக்கு திரு தெப்பக்குள மஹா ஆரத்தி நடைபெற்றது. சுவாமிகள் பாலமுருகனடிமை, ஸ்ரீபுரம் சக்தி அம்மா, வாழும் கலை ஸ்ரீ ரவிசங்கர் மற்றும் மதுரை ஆதீனம், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மற்றும் பல ஆதீனங்கள் புஷ்கரணியின் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடந்த மக்கள் குறைதீர்க்கும் நாளில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் இயற்கை மரணம் அடைந்த மாற்று திறனாளிகளின் 19 பாதுகாவலர்களுக்கு தலா ரூ.17 ஆயிரம் வீதம் 3 பேருக்கும், பாதுகாவலர் ஒருவருக்கு ரூ.1 லட்சம் காசோலையை மாவட்ட ஆட்சியர் பெ.குமாரவேல் பாண்டியன் வழங்கினார். துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் உடனிருந்தனர்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற திங்கள்கிழமை மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.82 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மீனாட்சி சுந்தரம், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சரவணகுமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் அஇஅதிமுக வேட்பாளர் கே.எஸ்.தென்னரசு வெற்றி பெற ஆலோசனை பணியில் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர், செய்யாறு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தூசி கே.மோகன் இடைத்தேர்தல் பணிகள் மேற்கொண்டு ஆலோசனை வழங்கினார். மொடக்குறிச்சி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சிவ.சுப்பிரமணியம், வேலூர் மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே.அப்பு, அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் அட்வகேட் ஜாகிர் உசேன், ஒன்றிய செயலாளர்கள் சி.துரை, திருமூலன், வந்தவாசி நகர செயலாளர் ஓட்டல் பாஷா, தூசி கன்னியப்பன் ஆகியோர் உடன் இருந்தனர்.



ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் கே.எஸ்.தென்னரசை ஆதரித்து, ஈரோடு வெட்டுக்காட்டுவலசு, நாராயண வலசு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி.கே.வாசன், முன்னாள் அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், தங்கமணி, கே.வி.ராமலிங்கம், விஜயபாஸ்கர் த.மா.கா. பொதுச் செயலாளர் விடியல் சேகர் ஆகியோர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு இரட்டை இலை சின்னத்துக்கு வாக்குகள் சேகரித்தனர்.



ஈரோடு சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் ஈவிகேஎஸ் இளங்கோவன், அமைச்சர் ஆர்.காந்தி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், ஜோதிமணி எம்.பி. ஆகியோர் கோண வாய்க்கால் பகுதியில் வாக்கு சேகரித்தனர்.

# காஞ்சிபுரத்தில் சாலையோர வியாபாரிகள் நல சங்கம் சார்பில் இலவச மருத்துவ முகாம்

## மேயர் மகாலட்சுமி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்




காஞ்சிபுரம், பிப். 15 -

தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் நல சங்கத்தின் சார்பாக இலவச மருத்துவ பரிசோதனை முகாம் காஞ்சிபுரம் காமராஜர் சாலையில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். இதில் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் கண்ணன், நகரமைப்பு அலுவலர் தாமோதரன், தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் நல சங்கத்தின் சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் ஜெய் கணேஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியினை சங்கத் தலைவர் கே.என்.மூர்த்தி தலைமையேற்றார். சங்க செயலாளர் கே.சரஸ்வதி வரவேற்பு உரை ஆற்றினார். சங்க பொருளாளர் வி.எஸ்.குமார் நன்றி உரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் அகர்வால் கண் மருத்துவமனை மோகன், நீரிழிவு மருத்துவமனை செம்பருத்தி, பார்மசி பிரைவேட் லிமிடெட், சரவணா ஆப்டிகல்ஸ், சக்தி பல் மருத்துவமனை, சங்கரா மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, ஆகிய மருத்துவமனைகளில் இருந்து தலைசிறந்த மருத்துவர்கள் வந்திருந்து பொதுமக்களுக்கு அவர்களின் உடல் ரீதியான பிரச்சினைகளுக்கு ஆலோசனை கூறினர். இந்நிகழ்ச்சியினை தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் நல சங்கத்தின் நிர்வாகிகள் ஏற்பாடு செய்தனர்.

# சென்னை பள்ளிக்கரணையில் 1000 மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட மாபெரும் கலை நிகழ்ச்சி போட்டி



சென்னை, பிப். 15 -

சென்னை பள்ளிக்கரணையில் உள்ள ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கல்லூரியின் முதல்வர் டி.எஸ்.சாந்தி தலைமையில் "யுவா 2கே 23" என்ற பெயரில் தமிழகத்தை சேர்ந்த 70 க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து வந்த 1000 மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சி போட்டி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் குறும்பட போட்டி, குழு நடனம், குழு பாடல், மணப்பெண் அலங்காரம், தீ இல்லா சமையல் உள்ளிட்ட பல்வேறு வகையான மேடைக்கு உள்ளே மற்றும் வெளியே நடைபெறக்கூடிய போட்டிகள் நடைபெற்றன. இதில் ஏராளமான கல்லூரிகளை சேர்ந்த மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினார்.

நடைபெற்ற இந்த போட்டியில்பள்ளிக்கரணையை சேர்ந்த ஆசான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் அள்ளி சென்றது. வெற்றி பெற்ற தனிநபர் மற்றும் குழுக்களுக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரைப்பட நடிகர் சந்தோஷ் பிரதாப் பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் துணை முதல்வர் ஆரியமாலா, காட்சி தொடர்புத்துறை தலைவர் மகேஷ், முனைவர் வனஜா, முனைவர் சாருலதா, மற்றும் பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த மாணவ மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# விவசாயிகளின் கேள்விகளை விளக்கிய எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக மாணவிகள்



செங்கல்பட்டு , பிப். 15 -

செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன்பேட்டை வேந்தர் நகரில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் வேளாண் துறையில் இளம் அறிவியல் நான்காம் ஆண்டு படிக்கும் மாணவிகள் சக்தி ஸ்வேத்தா, வினிதா, பவதாரணி, சுப்ரா, தீபிகா, சுஜிதா, புவனேஸ்வரி, மோனிகா ஸ்ரீ, திவ்யா, தீபா ஆகியோர் "கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டம்" என்ற திட்டத்தின் கீழ் மதுராந்தகம் ஒன்றியம் கிராமத்தில் மூன்று மாதங்கள் தங்கி விவசாய மக்களுக்கு வேளாண்மை பற்றி விழிப்புணர்வையும் மற்றும் தங்களுக்கு தெரிந்த விஷயங்களை தெரிவித்தனர். இம்மாணவிகள் கொட்டிவாக்கம் கிராம விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணை முறையின் நன்மைகள், பயன்கள் மற்றும் அதன் மூலம் அதிகம் வருவாய் பெறுவது போன்றவற்றை சிறப்பாகக் கூறினார்கள்.

பின்னர் விவசாயிகள் தங்களுக்கு இருந்த கருத்துகள் மற்றும் கேள்விகளை எழுப்பினர். இறுதியாக விவசாய மக்கள் ஒருங்கிணைந்த பண்ணை முறை பற்றி தங்களுக்கு விளக்கம் அளித்தது மிக பயனுள்ளதாக உள்ளது என்று பாராட்டினர்.

# ஈரோடு கிழக்கு தொகுதி அதிமுக வேட்பாளரை ஆதரித்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் நூதன பிரச்சாரம்



ஈரோடு, பிப். 15 -

ஈரோடு பெரியார் வீதியில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பிரசாரம் செய்தார். அப்போது அவர் மேளம் அடித்து வாக்கு சேகரித்தார். அவர் மேளம் அடிக்க திடீரென ஒரு பெண் நடனம் ஆடினார்.

முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசும்போது, மனதால் வாக்காளர்களை கவர களப்பணி ஆற்றி வருகிறோம். ஆளும் திமுக கட்சியின் 33 அமைச்சர்களும் முகாமிட்டு பணத்தை வாரி இறைத்து வருகிறார்கள். மனமா, பணமா என்றால் மனமே என்றும் இரட்டை இலை சின்னம் வெற்றி பெறும் என்ற மன உறுதி கிழக்கு தொகுதி வாக்காளர்களிடம் இருக்கிறது.

இரண்டு ஆண்டு கால தி.மு.க. மக்கள் விரோத அரசின் வேதனைகளை மூடி மறைக்க பணத்தை அவர்கள் வாரி இறைத்துகொண்டிருக்கிறார்கள். ஆடு,மாடுகளைபோல்மக்களை பட்டியில் அடைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள். அதிகாரம் எல்லை மீறி செல்கிறது. அதிகாரிகள் வேண்டுமானால் அதிகாரத்திற்கு பயந்து நடவடிக்கை எடுக்காமல் இருக்கலாம். ஆனால் மக்கள் இதனை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் தேர்தலில் நியாயத்தின் பக்கம், ஜனநாயகத்தின் பக்கம் நின்று சாமானிய தொண்டனான தென்னரசுக்கு வாக்களிப்பார்கள் என்று பேசினார்.




தமிழ்நாடு இறால் வளர்ப்பு விவசாயிகளின் கூட்டமைப்பின் ஆலோசனை கூட்டம் சீர்காழி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது , கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டடது மத்திய அரசு இறால் தீவன இடுபொருட்களுக்கு 10 சதவீதம் இறக்குமதி வரி குறைத்ததற்கு நன்றி தெரிவித்தும் , தீவன உற்பத்தியாளர்கள் தீவன விலையை குறைக்க வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் இன்றைய சூழலில் ஏற்றுமதியாளர்கள் இறால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கினால் மட்டுமே இறால் உற்பத்தியை தொடர முடியும், மாநில அரசிடம் மின்சார கட்டணத்தை குறைக்க பல முறை கோரிக்கை வைத்துள்ளோம். மேற்படி மின்சாரகட்டன குறைப்பு மற்றும் இறாலுக்கு லாபகரமான விலை நிர்ணய உத்தரவாதம் அரசு அளிக்க வேண்டும், இல்லையென்றால் ஓர் ஆண்டு இறால் வளர்ப்பு தொழிலை நிறுத்தி வைக்க விவசாயிகள் முடிவு செய்துள்ளோம் என தெரிவித்தனர

# புதுக்கோட்டை செந்தூரான் கல்லூரியில் தொழில் முனைவோருக்கான திறன் வளர்ப்பு பயிற்சி பட்டறை

புதுக்கோட்டை பிப்.15-

புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில் முனைவோருக்கான திறன் வளர்ப்பு மற்றும் அதன் வளர்ச்சிக்கான அணுகு முறைகள் குறித்து பயிற்சி பட்டறை நடைபெற்றது.




புதுக்கோட்டை மாவட்டம், லெணா விலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் (நிறுவனங்கள் கண்டுபிடிப்பு கவுன்சில் & தொழில்முனைவோர் மேம்பாடு) மற்றும் இயந்திரவியல் துறை ஆகியவை இணைந்து தொழில் முனைவோருக்கான திறன் வளர்ப்பு மற்றும் அதன் வளர்ச்சிக்கான அனுகுமுறைகள் குறித்த பயிற்சி பட்டறை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி பட்டறையில், கல்லூரியின் இயந்திரவியல் துறையை சார்ந்த உதவி பேராசிரியர் சரவணன் வரவேற்புரை வழங்கினர். சிறப்பு விருந்தினராக தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் மார்ட்டின் மற்றும் புதுக்கோட்டை ஜி டெக் சொல்யூசன் மேனேஜிங் டைரக்டர் கோபிநாத் கலந்து கொண்டு பேசுகையில், இளம் தொழில் முனைவோருக்கான விழிப்புணர்வு மற்றும் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள் அரசு வழங்குகின்ற உதவிகள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ஆகியவற்றினை மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மேலும் மாணவர்களிடையே தொழில் முனைவோர்களாக எவ்வாறு உருவாதல் என்பது குறித்து எடுத்துரைத்தார். இந்தப் பயிற்சி பட்டறையில் சுமார் 150 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் தலைவர் செல்வராஜ், துணைத் தலைவர் நடராஜன், நிர்வாக இயக்குனர் வயிரவன், முதன்மைச் செயல் அதிகாரி கார்த்திக், கல்லூரியின் முதல்வர் கணேஷ்பாபு, செயலாளர் தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். கல்லூரியின் இயந்திரவியல் துறையைச் சேர்ந்த உதவிப் பேராசிரியர் பழனிசாமி நன்றியுரை வழங்கினார்.




புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே இலைகடிவிடுதி பகுதியைச் சேர்ந்தவர் பூரணம். இவருக்கு சொந்தமான இரண்டு ஆடு இரை தேடி செல்லும் போது வீட்டின் அருகே உள்ள 50 அடி ஆழ கிணற்றில் தவறி விழுந்தது. இதைக் கண்ட அக்கம் பக்கத்தினர் உடனே தீயணைப்பு மீட்பு பணி குழுவினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலறிந்து சம்ப இடத்திற்கு சென்ற தீயணைப்பு மீட்பு பணி குழுவினர் 50 அடி ஆழமுள்ள கிணற்றில் கயிறு கட்டி கிணற்றினுள் இறங்கி, தவறி விழுந்த இரண்டு ஆட்டை உயிருடன் மீட்டு ஆட்டின் உரிமையாளரிடம் ஒப்படைத்தனர். ஆட்டை உயிருடன் மீட்ட தீயணைப்பு மீட்பு பணி குழுவினருக்கு அப்பகுதி பொதுமக்கள் தங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்தனர்.

# முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரை அவதூறாக பேசிய வழக்கில் திமுகவினர் இருவர் விடுதலை

புதுக்கோட்டை, பிப்.15-

அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரை அவதூறாக பேசியதாக திமுக பிரமுகர்களான தென்னலூர் பழனியப்பன், அரிமளம் ராமலிங்கம் ஆகியோர் மீது பதியப்பட்ட வழக்குகளில் இருந்து இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.





கடந்த அதிமுக ஆட்சியில் திமுக பிரமுகர்களான தென்னலூர் பழனியப்பன் மற்றும் அரிமளம் ராமலிங்கம் ஆகியோர் மீது பதியப்பட்ட வழக்குகளில் இருந்து இருவரையும் விடுதலை செய்து புதுக்கோட்டை மகிளா நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கடந்த அதிமுக ஆட்சியில் 2019ம் வருடம் அப்போதைய அமைச்சர் விஜயபாஸ்கரை அவதூறாக பேசி கொலை முயற்சியில் ஈடுபட்டதாக திமுக நிர்வாகிகள் தென்னலூர் பழனியப்பன் மற்றும் அரிமளம் ராமலிங்கம் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக விசாரணை நடைபெற்று வந்த நிலையில் மகிளா நீதிமன்றம் போதுமான ஆதாரங்கள் நிரூபிக்கப்படவில்லை என கூறி மேற்படி இருவரையும் விடுதலை செய்து நீதிபதி சத்யா தீர்ப்பு நேற்று தீர்ப்பளித்தார். இதனையடுத்து அவர்களது ஆதரவாளர்கள் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

# கறம்பக்குடி விஜயரகுநாத பல்லவராயர் நினைவு நாள் நிகழ்ச்சி

கறம்பக்குடி பிப்.15-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடியில் விஜயரகுநாத பல்லவராயரின் 24-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கடந்த மூன்று நாட்களாக விளையாட்டு போட்டி, பட்டிமன்றம், ஓவிய கண்காட்சி, விருது வழங்கும் விழா போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வந்தன. நிகழ்ச்சியின் நிறைவு நாளில் கவிஞர் பி.எஸ். செல்வராஜ் எழுதிய மனிதன் நாவல் வெளியீட்டு விழா ராஜ மனோகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நாவல் வெளியீட்டு விழாவில் திரைப்பட இயக்குனர் சுந்தர்ராஜன் பங்கேற்று நாவலை வெளியிட்டார்.



அதனைக்கவிச்சுடர் கவிதை பித்தன் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து நூல் திறனாய்வு வாழ்த்துரை கவிஞர் தங்கம் மூர்த்தி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் விஜய ரவி பல்லவராயர், ஓய்வுபெற்ற தொடக்க கல்வி அலுவலர் திருமேணிநாதன், மஜக மாவட்ட செயலாளர் முகமது ஜான், ரோட்டரி துணை ஆளுநர் எவரெஸ்ட் சுரேஷ், ரோட்டரி தலைவர் ராமமூர்த்தி, ஆலங்குடி தொழிலதிபர் செல்வராஜ், மலேசியா ராஜேஷ், கண்ணன், வாண்டான்விடுதி ஒன்றிய குழு உறுப்பினர் திருநாவுக்கரசு மற்றும் பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

# முதல்வர் ஸ்டாலின் நீண்ட உறக்கத்தில் இருப்பதாக குஷ்பு விமர்சனம்

சென்னை, பிப்.15-

யாராவது முதல்வர் ஸ்டாலினை எழுப்பி உண்மையான படத்தைக் காட்ட முடியுமா? நீண்ட நாட்களாக உறக்கத்தில் இருந்துள்ளார் என குஷ்பு விமர்சித்துள்ளார்.

கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் பின்புறம் பல்வேறு கடைகள் மற்றும் வழக்கறிஞர்களின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் அப்பகுதிக்கு வந்த இரு இளைஞர்கள் மீது ஐந்து பேர் கொண்ட மர்ம கும்பல் அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களால் சரமாரியாக தாக்கிவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர். அப்போது மர்ம கும்பல் வெட்டியதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் ரத்த காயங்களோடு தப்பி ஓடியுள்ளார். இந்த சம்பவத்தின் போது கொலை செய்த கொலையாளிகள் சர்வசாதாரணமாக நடந்து செல்லும் காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதுதொடர்பாக தனிப்படை போலீசார் விசாரணை மேற்கொண்ட நிலையில், ரத்தினபுரியைச் சேர்ந்த ஸ்ரீராம் என்பவர் கடந்த 2021 அன்று கொல்லப்பட்டார். அதில், கோகுல் உள்ளிட்ட 5 பேருக்கு தொடர்பு இருந்துள்ளது. இந்த கொலைக்கு பழி வாங்குவதற்காக கோகுல் கொல்லப்பட்டுஇருக்கலாம் என போலீசார் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் பட்டப்பகலில் நடைபெற்ற கொலை சம்பவம் தொடர்பாக அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்து இருந்தனர். இந்த நிலையில் பாஜக நிர்வாகி குஷ்பு வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், கோவை நீதிமன்றம் அருகே பட்டப்பகலில் வாலிபர் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கற்ற நிலை உள்ளதாக தெரிவித்தவர், யாராவது முதல்வர் ஸ்டாலினை எழுப்பி உண்மையான படத்தைக் காட்ட முடியுமா? நீண்ட நாட்களாக உறக்கத்தில் இருந்துள்ளார் என குஷ்பு விமர்சித்துள்ளார்.

# கந்தர்வகோட்டை வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் விவசாயிகள் கண்டுணர்வு பயணம்

கந்தர்வகோட்டை பிப்.15-

கந்தர்வகோட்டை வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தில் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் கண்டுணர்வு பயணம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் என்ற தலைப்பில் கந்தர்வகோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன் தலைமையில் அழைத்து சென்று வரப்பட்டது.



விவசாயிகள் கண்டுணர்வு பயணத்திற்கு வட்டார தொழில்நுட்ப மேலாளர் அனைவரையும் வரவேற்றார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ், உதவி தொழில்நுட்ப மேலாளர் சுப்பிரமணியன் மற்றும் ரோஸ் பவுண்டேசன் நிறுவனர் ஆதப்பன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ரோஸ் பவுண்டேசன் நிறுவனர் ஆதப்பன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் எப்படி உருவாக்குவது அதனை செயல்படுத்துவது எப்படி என்றும் நெல், நிலக்கடலை, எள் மற்றும் சிறுதானிய பயறுகளை எப்படி மதிப்புக் கூட்டி விற்பனை செய்வது என்றும் பேசினார். முன்னோடி விவசாயிகள், விவசாயிகளின் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். கந்தர்வகோட்டை வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் சுப்பிரமணியன் விவசாயிகள் வருகையினை பதிவு செய்தார். விவசாயிகள் கண்டுணர்வு பயணத்திற்கு உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கீதா சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# புதுக்கோட்டையில் போதையற்ற தமிழ்நாட்டை உருவாக்க கோரி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் கையெழுத்து இயக்கம்

புதுக்கோட்டை, பிப்.15-

போதையற்ற தமிழ்நாட்டை உருவாக்க கோரி புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் நேற்று கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.



தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடி பேரிடம் கையெழுத்து பெறும் இயக்கத்தின் ஒரு பகுதியாக புதுக்கோட்டையிலும் இந்த இயக்கம் நடைபெற்றது. கையெழுத்து இயக்கத்திற்கு வாலிபர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் மகாதீர் தலைமை வகித்தார். கையெழுத்து இயக்கத்தை மருத்துவர் முருகசுந்தரம் முதல் கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார்.

கையெழுத்து இயக்கத்தை ஆதரித்து வாலிபர் சங்கத்தின் முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் ஸ்ரீதர், நாராயணன், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன், முன்னாள் தலைமை ஆசிரியர் மணவாளன், தமுஎகச மாவட்டப் பொருளாளர் ஜெயபாலன் உள்ளிட்டோர் பேசினர். வாலிபர் சங்க மாவட்டச் செயலாளர் குமாரவேல் நிறைவுரையாற்றினார். கையெழுத்து இயக்கத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# அதானி விவகாரத்தில் பாஜக பயப்படுவதற்கு எதுவுமில்லை என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பேச்சு

டெல்லி பிப்.15-

அதானி விவகாரத்தில் பாஜக பயப்படுவதற்கு எதுவுமில்லை என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.



அதானி குழுமம் மீதான பங்குச்சந்தை மோசடி தொடர்பாக அமெரிக்காவை சேர்ந்த ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் அறிக்கை வெளியிட்டது. இது அதானி குழுமத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இந்த விவகாரத்தை நாடாளுமன்ற மக்களவையிலும், மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சிகள் எழுப்பி பெரும் அமளியில் ஈடுபட்டன. மேலும், அதானிக்கு சாதகமாக மத்திய அரசு செயல்படுவதாக காங்கிரஸ் குற்றஞ்சாட்டி வருகிறது. இதனிடையே, அதானி குழுமம் மீதான ஹிண்டர்ன்பர்க் ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்று வருகிறது.

அதில், அதானி நிறுவனம் முறைகேட்டில் ஈடுபட்டதா? என்பது குறித்து நிபுணர் குழு அமைத்து விசாரிக்க சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சரும், பாஜக மூத்த தலைவருமான அமித்ஷா நேற்று ஏ.என்.ஐ. செய்தி முகமைக்கு பேட்டி அளித்தார். அதில் அதானி குழும விவகாரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அமித்ஷா, இந்த விவகாரத்தை சுப்ரீம் கோர்ட் விசாரித்து வருகிறது. சுப்ரீம் கோர்ட்டு வசம் வழக்கு விசாரணை இருப்பதால் அமைச்சராக இந்த விவகாரத்தில் நான் கருத்து சொல்வது சரியல்ல. ஆனால், இதில் பாஜக பயப்படவோ, மறைக்கவோ எதுவும் இல்லை' என்றார்.

### தேசிய குடற்புழு நீக்க நாள் முகாம்

# மாணவர்கள் படிப்பு மட்டுமின்றி உடல் நலத்திலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்

**மாவட்ட ஆட்சியர் அறிவுரை**




கள்ளக்குறிச்சி பிப்.15-

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நேற்று தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு ஏமப்பேர் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் ஷ்ரவன்குமார், தொடங்கி வைத்தார். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடப்பாண்டு தேசிய குடற்புழு நீக்க மாத்திரைகள் அனைத்து பள்ளிகள், கல்லூரிகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் என மொத்தம் 2 ஆயிரத்து 517 நிலையங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பொது தேர்வுக்கு தயாராகும் மாணவ மாணவிகள் படிப்பு மட்டுமின்றி உடல் நலத்திலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் 1 முதல் 19 வயது வரை உள்ள 4 லட்சத்து 48 ஆயிரத்து 969 நபர்களுக்கும், 20 முதல் 30 வயதிற்குட்பட்ட 1 லட்சத்து ஆயிரத்து 795 பெண்களுக்கும் மொத்தம் 5 லட்சத்து 50 ஆயிரத்து 764 நபர்களுக்கும் அல்பெண்டாசோல் மாத்திரை வழங்கப்பட்டு வருகிறது. இந்த மாத்திரை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை, காலை உணவு அல்லது மதிய உணவு சாப்பிட்ட பிறகு சாப்பிட வேண்டுமென மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) ராஜா, பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# இடைத்தேர்தல் ஜனநாயக முறையில் நடைபெறுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும்–அண்ணாமலை வேண்டுகோள்

சென்னை பிப்.15-

இடைத்தேர்தல் சுதந்திரமாகவும், ஜனநாயக முறையிலும் நடைபெறுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும் என அண்ணாமலை வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை இந்திய தலைமை தேர்தல் ஆணையத்துக்கு எழுதிய கடிதத்தில், ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ., திடீர் மறைவால், அந்த தொகுதிக்கு தேர்தல் கமிஷன் இடைத்தேர்தல் அறிவித்துள்ளது. ஆட்சி அமைத்து 22 மாதங்கள் ஆகியும் எந்த மக்கள் நலப்பணிகளையும் மேற்கொள்ளாத திமுக அரசு, பணம் மூலம் தேர்தலில் வெற்றி பெறலாம் என நம்புகிறது. கடந்த ஜனவரி 29-ஆம் தேதி திமுக அமைச்சர் கே.என்.நேரு மற்றும் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் பண விநியோகம் குறித்து பேசிய ஆடியோ வெளியானது. இது தொடர்பாக விரிவான தகவல்களுடன், திமுக.,வினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாஜக தலைவர்கள் மாநில தேர்தல் கமிஷனரிடம் மனு அளித்தனர். கடந்த 11-ஆம் தேதி திமுக தெற்கு யூனியன் காசாளர் சர்புதின் என்பவரது காரில் இருந்து திருப்பூரில் காவல் அதிகாரிகள் டோக்கன்களை பறிமுதல் செய்தனர். கடந்த வாரம், வாக்காளர்களுக்கு தலா 2 கிலோ இறைச்சியை லஞ்சமாக விநியோகம் செய்துள்ளனர்.

தொகுதியில் முகாமிட்டுள்ள திமுக அமைச்சர்கள், தொகுதியில் குறிப்பிட்ட இடத்தில் தினமும், அமரும் வாக்காளர்களுக்கு தலா ஆயிரம் ரூபாயும், தொடர்ச்சியாக 20 நாட்கள் குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்தால் ரூ.5 ஆயிரமும் பணம் கொடுக்க திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பாக தமிழக பாஜகவினர் அளித்த புகார்களில் மாநில தேர்தல் ஆணையம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. திமுக., அரசின் அதிகார துஷ்பிரயோகத்தை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால், ஈரோட்டில் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் என்னும் எழுத்தும் என்ற திட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய 10 ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். இதில் மாவட்ட கல்வி அலுவலர் பார்த்தசாரதி மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# கறம்பக்குடியில் பாரதிய ஜனதா கட்சியின் ஒன்றிய செயற்குழு கூட்டம்

கறம்பக்குடி பிப்.15-

பாரதிய ஜனதா கட்சியின் கறம்பக்குடி வடக்கு ஒன்றிய செயற்குழு கூட்டம் கறம்பக்குடி தனியார் மஹாலில் நடைபெற்றது. ஒன்றிய தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டத் தலைவர் விஜயகுமார், மாவட்டத் துணைத் தலைவர் ஜீவானந்தம், மாவட்ட செயலாளர் கங்காதரன், முன்னாள் புதுக்கோட்டை நகர தலைவர் காடுவெட்டி குமார், ஒன்றிய பார்வையாளர் அருண், பொருளாதாரப் பிரிவு மாவட்டத் தலைவர் கோவிந்தசாமி, மகளிர் அணி மாவட்ட தலைவர் கருசித்ரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.



முன்னதாக கூட்டத்திற்கு வரவேற்புரை ஒன்றிய பொதுச் செயலாளர் ராஜதுரை, அமைப்பு ரீதியான விளக்க உரை பொதுச் செயலாளர் ரங்கராஜு, கட்சி நிதி வசூல் தொடர்பாக ஒன்றிய பொருளாளர் செந்தில் குமார் விளக்க உரையாற்றினர். தீர்மானங்கள் ஒன்றிய துணைத் தலைவர்கள் மாதவன், சுரேஷ், குமரேசன், சத்யராஜ் ஆகியோர் முன்மொழிய அதை ஒன்றிய செயலாளர்கள் விவேகானந்தர், பரிமளா, அன்னலட்சுமி, சரவணன், பாண்டிதுரை ஆகியோர் வழிமொழிந்தனர்.

கறம்பக்குடி அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர் இல்லாததால் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு செல்லும் நோயாளிகள் இறக்க நேரிடுகிறது. ஆகையால் 24 மணி நேரமும் மருத்துவர்கள் இருந்து மருத்துவம் பார்க்க அரசு வழிவகை செய்ய வேண்டும், கறம்பக்குடி பேருந்து நிலையம் கட்டி பல ஆண்டுகள் ஆகியும் அதில் உள்ள கடைகள் ஏலம் நடத்தி பல மாதங்கள் ஆகியும் இன்னும் திறக்கப்படாமல் இருக்கும் பேரூராட்சி நிர்வாகம் உடனடியாக பேருந்து நிலையத்தை திறக்க வழிவகை செய்ய வேண்டும், கறம்பக்குடி வடக்கு தெருவில் உரிய அனுமதி இல்லாமல் பொதுமக்கள் குடியிருப்பு பகுதியில் மாட்டு இறைச்சி கடை நடத்தி வருபவர்களுக்கு பேரூராட்சி நிர்வாகம் ஒதுக்குப்புறமாக கடை வைத்துக் கொள்ள உரிய ஏற்பாடு செய்ய வேண்டும், கறம்பக்குடி மூவர் ரோடு, மணமேடை, செங்கமேடு வழியாக வெட்டிக்காடு வரை செல்லும் சாலையில் மணமடையில் இருந்து செங்கமேடு வழியாக வெட்டிக்காடு வரை 20 ஆண்டுகளுக்கு மேலாக பழுதடைந்துள்ள சாலை சரி செய்யாமல் உள்ளது அதை தமிழக அரசு உடனடியாக கவனத்தில் கொண்டு சரி செய்யவேண்டும் எனபத்துக்கு மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலியபெருமாள் முத்துக்குமார் உள்ளிட்டோர் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியில் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஒன்றிய செயலாளர் மாரிமுத்து நன்றி கூறினார்.

# மதுரை பொன்மேனி டால்பின் பள்ளியில் 36–ஆவது ஆண்டு விழா

மதுரை பிப்.15-

மதுரை பொன்மேனி டால்பின் பள்ளியின் 36-ம் ஆண்டு விழா நேற்று முந்தினம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளியின் தாளாளர் கண்மணி தலைமை தாங்கினார். பள்ளியின் சேர்மன் ராஜ்மோகன் முன்னிலை வகித்தார்.



இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக டி.வி. நிகழ்ச்சி தொகுப்பாளர் கோபிநாத் மற்றும் சுந்தரச் செல்வி, போச்சா தேவர் ஆகியோர் பங்கேற்றனர். அவருக்கு பள்ளியின் சார்பில் தாளாளர் கண்மணி, சேர்மன் ராஜ்மோகன் ஆகியோர் வரவேற்று, வாழ்த்து தெரிவித்து நினைவு பரிசு வழங்கினார்கள்.

இதனை தொடர்ந்து சிறந்த ஆசிரியர்களுக்கு பரிசுகளும், பதக்கங்களும் வழங்கி பாராட்டினார். அதேபோல் சிறந்த மாணவர்களுக்கும், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசும், பதக்கங்களும் வழங்கி பாராட்டினார். அதனைத் தொடர்ந்து மாணவ, மாணவியர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# டெல்லி, மும்பை பிபிசி அலுவலகங்களில் வருமான வரித்துறை சோதனை

# கினியாவில் மார்பர்க் வைரஸ் பரவல் 9 பேர் பலி





# அமெரிக்க பல்கலைக்கழகத்தில் திடீர் துப்பாக்கி சூடு 5 பேர் பலி

சென்னை / புதுக்கோட்டை | 15.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

15.02.2023 புதன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

டி. பி. விஜயதுங்கா, , இலங்கையின் அரசுத்தலைவர் (பி.1922)



சத்தியவாணி முத்து , தமிழக அரசியல்வாதி (பி.1923) (இ.1999)



கிரெய்க் மேத்தியூஸ் , தென்னாப்பிரிக்கத் துடுப்பாளர் (பி.1965)



## இன்றைய நினைவு நாள்

கலிப் , இந்தியக் கவிஞர் (பி.1796) (இ.1869)



டி. கே. சண்முகம் , தமிழக நாடகத், திரைப்பட நடிகர், அரசியல்வாதி (பி.1912) (இ.1973)



கொத்தமங்கலம் சுப்பு , தமிழக எழுத்தாளர், நடிகர், பாடகர், இயக்குநர் (பி.1910) (இ.1974)



முழுமையான பாதுகாப்பு நாள் (சிங்கப்பூர்)